Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

## தனியார்டெலிவிசன்சேவை ஏப்ரலில் ஒளிபரப்பு

மகாராஜா நிறுவனமும் சிங்கப்பூர் ரெலி கொம் இன்ரர் நஷனலும் கூட்டுச் சேர்ந்து தனியார் ரெலிவிஷன் நிலையம் ஒன்றை நிறுவவுள்ளன. ரி. வி. நிலையம் வரும் ஏப்ரல் மாதத்தில் ஒளிபரப்புச் சேவையை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், கல்விச்சேவை, சர்வதேச விவகாரம் ஆகியவற்றையே ரி. வி நிலையம் ஒளி பரப்பும். உள்ளூர் அரசியல் விவகாரங்களும் அதனுடன் தொடர்புடைய விடயங்க (4 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 16 (02 - 12 1991) திங்கட்கிழமை ஓசை 287

# போர் மிரட்டல் இருக்கும் வரை

# ஆனையிறவை திறப்பது ஆபத்து

## சமாதான சூழலில் யோசிக்கலாம் புலிகள் பேச்சாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாடுமீது படையெடுப்பு நடத்தப்போவதாக சிங்கள இராணுவம் தொடர்ந்து மிரட்டிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஆனையிறவுப் பாதையை போக்குவரத்திற்கு திறந்துவிடுவது மிகவும் ஆபத்தானது என விடுதலைப்புலிகள்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு முழுமையான போர் நிறுத்தத்தின் ஒரு அம்சமாக ஆனையிறவுப் பாதையை திறந்துவிடுவது பற்றி பரிசீலனை செய்யலாமென புலிகள் இயக்க பேச்சாளர் தெரிவித்தார்

ஆனையிறவு இராணுவத்தளத்தில் பெருமளவு படைகளை குவித்திருக்கும் சிங்கள அரசு ஆகாய மார்க்கமாக விநியோகம் தொடர்வதில் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டிருப்பதால் தரை மார்க்க போக்குவரத்தை வற்புறுத்திவருகிறது.

சிறிலங்கா அரசதரப்பும், இராணுவத்தரப்பும் வடக்கில் ஒரு பெரும்படை எடுப்பை நடத்தப்போவதாக மிரட்டிக் கொண்டிருக்கின்றன. அரசியல் தரப்பும், இராணுவமும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் புலிகளை ஒடுக்கி தமிழ (4 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஒரு சிறுகப்பல் சேவையில்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு உணவுப் பொருட்களை எடுத்து வருவதற்கென மேலும் ஒரு சிறிய ரக கப்பல் சேவையில் அமர்த்தப்படவிருக்கின்றது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தற்பொழுது 'செந்தில்'' என்ற சிறியரக கப்பலை மா ஏற்றிவருவதற்கென (4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டு வீச்சு எறிகணைத் தாக்குதல்

### சிறுவர்கள் உட்பட மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை இலந்தைகட்டிப் பிள்ளையார் கோவிற் பகுதியில் நேற்று மாலை பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் விழுந்து வெடித்ததில் இரண்டு சிறுவர்கள் காயமுற்றனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பாஸ்கரன் (10வயது), கேதீஸ்வரன் (9 வயது) ஆகியோரே காயமடைந்தவராவர். மேலும் சாவகச்சேரிப் பகுதியில் ஷெல் விழுந்து வெடித்ததில் கணபதிப்பிள்ளை என்பவர் படுகாயமுற்ற நிலையில்யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இதேவேளை நேற்று மாலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்றரை மாதத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### - தொண்டமான்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் பதில் கடிதம் நம்பிக்கை தருவதாக உள்ளதாகவும், இக் கடிதம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கடிதம் குறித்து ஜனாதிபதி பிரேமதாசா, எதிர்க்கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.

எச். எம். அஷ்ரப், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் [3 ஆம் பக்கம் பார்க்க]

ஆனையிறவுப் பாதையை திறந்துவிடுவது பற்றி பரிசீலனை செய்யலாமென புலிகள் இயக்க பேச்சாளர் தெரிவித்தார்

ஆனையிறவு இராணுவத்தளத்தில் பெருமளவு படைகளை குவித்திருக்கும் சிங்கள அரசு ஆகாய மார்க்கமாக விநியோகம் தொடர்வதில் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டிருப்பதால் தரை மார்க்க போக்குவரத்தை வற்புறுத்திவருகிறது.

சிறிலங்கா அரசதரப்பும், இராணுவத்தரப்பும் வடக்கில் ஒரு பெரும்படை எடுப்பை நடத்தப்போவதாக மிரட்டிக் கொண்டிருக்கின்றன. அரசியல் தரப்பும், இராணுவமும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் புலிகளை ஒடுக்கி தமிழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இருமாதங்களுக்குள் வடபகுதி பூரண கட்டுப்பாட்டில் வரும்

## ஹமில்டன்

(கண்டி)

'யாழ்' நகரிலிருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்திலேயே இராணுவத்தினர் தற்போது யுத்தப பணிகளில் ஈடுபட்டுள்ளனர்: ஆகையால் வடபகுதி இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் எமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்." என சிறிலங்கா கூட்டுப்படைகள் தலைமையக தளபதி ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய ஹமில்டன் வனசிங்கா இதனைத் தெரிவித்தார்.

# கோணேசர் ஆலய நிலங்கள் சிங்களவருக்கு பகிர்ந்தளிப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பகுதியில் பலஏக்கர் நிலங்கள், கோணேஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான பல ஏக்கர் நிலங்கள் என்பவை சிங்களவர்களுக்கு உரியனவையாக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

திருக்கோணமலைப் பகுதியில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு மற்றும் கெடுபிடி நடவடிக்கைகளுக்குப் பயந்து தமிழ் மக்கள் பலர் வெளியேறியிருப்பது தெரிந்ததே.

# ஒன்றரை மாதத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## - தொண்டமான்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் பதில் கடிதம் நம்பிக்கை தருவதாக உள்ளதாகவும், இக் கடிதம் தொடர்பாக ஜனாதிபதியுடனும் மற்றும் எதிர்க்கட்சிகளுடனும் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் திருப்தி தருவதாக உள்ளதாகவும் இதனால் ஒரு மாதத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படலாமெனவும் அமைச்சர் தொண்டமான் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்,

இறுதியாகக் கிடைத்த விடுதலைப் புலிகளின் பதில் கடிதம் குறித்து ஜனாதிபதி பிரேமதாசா, எதிர்க்கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழ்க் குழுக்களுடன் தக்கதருணத்தில் பேசுவேன்


(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலுள்ள விடயங்கள் குறித்து தக்க தருணத்தில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளோடும் கலந்து ஆலோசனை நடத்துவேன் என்று அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார் என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (22)

# தமிழீழ அரசு உருவாக்கத்திற்கான முன்னோடி அமைப்பே காவற்துறை

## காவற்துறை பொறுப்பாளர் நடேசன்

அமைக்கப்படவிருக்கும் தமிழீழ அரசின் அதிகாரமாகவே தமிழீழ காவல் துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது விடுதலையை விரைவில் பெறவுள்ள போராட்ட இயக்கம் ஒரு அரசை அமைப்பதற்கான நடவடிக்கை செய்யும் இவ்வாறான நடவடிக்கையின் முதல் கட்டமே இந்தக்காவல் துறை



தமிழீழ காவல்துறை பணிமனை திறப்பு சம்பந்தமாக நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தமிழீழக் காவற் துறை பொறுப்பாளர் திரு. நடேசன் தெரிவித்தார்.

ஒரு அரசாங்க இயந்திரத்தில் அடங்கியுள்ள அம்சங்களில் இந்த காவல் துறையும் ஒன்று. தற்போது தமிழீழத்தில் அமைக்கப்பட்டுள்ள காவல்துறை நாம் அமைக்கப் போகும் அரசின் இறைமையை வெளிப்படுத்தும் என்றும் தமிழீழ மக்கள் தம்மைத் தாமே ஆளும் இலக்கதின் முதல் நடவடிக்கை இது. அடுத்த கட்டமாக மற்றைய அம்சங்கள் வெளிப்படுத்தப்படும். ஏற்கனவே நாம் தமிழ்த் தேசிய இராணுவத்தை உரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகர காவற் துறை பணிமனை நேற்று திறப்பு

யாழ்ப்பாண நகர காவல் பணிமனையும், போக்குவரத்துக் காவல் பணிமனையும் நேற்றுக் காலை ஏழு மணியளவில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது: நாலாம் குறுக்குத் தெருவில் உள்ள யாழ்ப்பாணம் நகர காவல் பணிமனையில் இருபுறமும் காவலர்கள் அணிவகுத்து நிற்க, தேசிய கொடியை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா அவர்கள் முதலில் ஏற்றி

[3 ஆம் பக்கம் பார்க்க)

# நாகராஜன் குற்றச்சாட்டிற்கு கருணாநிதி மறுப்பு

(சென்னை)

தமிழக அரசின் முன்னாள் உள்துறைச் செயலாளர் ஆர். நாகராஜன் தன் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி மறுத்துள்ளார்.

நேற்றுக் காலை சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கருணாநிதி நாகராஜன் மிரட்டலுக்குப் பயந்தோ, அல்லது சலுகையை எதிர்பார்த்தோ இப்படிப்பட்ட வாக்குமூலம் அளித்திருக்க வேண்டும் என்றும்.

முந்தைய திராவிடமுன்னேற்றக்கழக அரசு வெளிப்படையாகவே செயல் பட்டது என்றும்.

இலங்கைப் போராளிகள் பற்றிய அணுகு முறையும் பகிரங்கமாகவே இருந்து வந்தது என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைப் போராளிகளுடனான சந்திப்பிலோ பேச்சுவார்த்தைகளிலோ நாகராஜன் பங்கு பற்றவில்லை என்றும்.

1983 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசும் தமிழக அரசும் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி மேற்கொண்ட

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சவுதியால் வந்தவர் காரணமின்றி கைது

(கொழும்பு)

எட்டு வருடமாக சவூதியில் வேலை பார்த்துவிட்டு நாடு திரும்பிய திருக்கோணமலையைச் சேர்ந்த வாலிபர் கிருஷ்ணசாமி ரவீந்திரன் என்பவர் கடந்த பதினொரு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். 04.12.90இல் கொழும்பு விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட இவர் களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். சவூதியிலோ அல்லது இலங்கையிலோ எந்தக் குற்றமும் புரியாதவர் என்றும் இவரது சகோதரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டுள்ளார். இம்மனுவில் மேலும் 04.03.91 திகதியிடப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவில் மனுதாரர் ஏற்கனவே கைதாகியுள்ளார் என்பதை தெரியாமலேயே அவரைக் கைது செய்து சிறையில் வைக்குமாறு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் பணித்துள்ளார். என்றும் இவ் உத்தரவில் பொலிஸ் மாஅதிபரும் கைச்சாத்திட்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

### தீவக பரீட்சார்த்திகள்

## அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளவும்


தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பாடசாலைப் பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தமது அனுமதி அட்டைகளை இன்று பிற்பகல் 100 மணிக்குப் பின் பின்வரும் பாடசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம் என்று வேலணைக் கல்விக்கோட்டப்பிரதிப்பணிப்பாளர் சி. புலேந்திரன் தெரிவித்துள்ளார். ஊர்காவற்றுறைக் கோட்டத்தினைச் சார்ந்தவர்கள் யாழ். மத்திய கல்லூரியிலும், புங்குடுதீவுக் கோட்டத்தினை யாழ். இந்து மகளிர் கல்லூரியில், மண்டைதீவுக் கோட்டத்தினை யாழ் புனித மரியாள் பாடசாலையில் (ஓ. எல். ஆர்) வேலணை, நெடுந்தீவு, நயினாதீவு கோட்டத்தினைச் சேர்ந்தவர்கள் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் பெற்றுக் கொள்ளும்படி சி. புலேந்திரன் கேட்டுள்ளார்,


### யா. வேம்படி மகளிர் கல்லூரி
### ஆண்டு 6 அனுமதி
### பிரவேச பரீட்சை 1992

1. இப்பரீட்சை 28.12.1991 இல் நடைபெறும்.
2. தற்போது ஆண்டு 5 இல் கல்விகற்கும் மாணவர்களும் 01.02 1981 ஆம் திகதிக்கு பின்னர் பிறந்தவர்களும் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவராவர்.
3. பிரவேச பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை


## 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 19 — 09 — 1974



இறைவன் அடியில் 02 — 11 — 1991

### சுவாமிநாதன் சதீஸ்குமார்

காண்கின்ற இடமெல்லாம் கண்நிறைந்து காண்கின்றோம்
நினைவெல்லாம் கனவாகி நெஞ்சு தடுமாறுகின்றோம்.
திங்கள் பல சென்றாலும் ஆண்டு பல மறைந்தாலும்
நின்முகத்தின் ஒளி நமக்குள் நீங்காது ஒளிவீசும்!

உனது பிரிவின் துயரில்,
அப்பா, அம்மா, அம்மம்மா,
சகோதரிகள், சித்தப்பாமார்
சித்திமார், மாமன்மார், மாமிமார்,
மச்சான்மார், மச்சாளிமார்,
மருமக்கள்.

சங்கம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(R/1973)

## பாவிக்கப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கீழ்வரும் பொருட்கள் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் திகதி காலை 10 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

| பொருட்கள். | | தொகை. |
|---|---|---|
| 1. [illegible] | - | 03 |

## மாநகரசபை பத்திரங்கள் உணவு விடுதிக்குள்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைக்குச் சொந்தமான பெருந்தொகையான பத்திரங்கள் கொழும்பு நகர மண்டபத்திற்கு அண்மையிலுள்ள உணவு விடுதி ஒன்றில் மாநகரசபை பாதுகாப்பு ஊழியரால் கண்டுபிடிக்கப்பட்டன. பழைய கடதாசிகள் என்று இவை விற்கப்பட்டிருந்தன.

வரி இறுப்பாளர் மதிப்பீடு தொடர்பான அறிவுறுத்தல்கள், சம்பளப்படிவங்கள் ஆகியனவும் இவற்றில் அடங்கும். அனாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றையடுத்தே இவை கண்டுபிடிக்கப்பட்டன.


ஸ்ரீதர் திரையரங்கில்
அல்ஜீரிய நாட்டு
### விடுதலைப் போராட்டம்
(தமிழாக்கம் செய்யப்பட்டது)
தினசரி 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.
(B/3556)


## நினைவு கூருகின்றோம்...

1991 - 12 - 02



கப்டன் றெஜி

1. இப்பரீட்சை 28.12.1991 இல் நடைபெறும்.
2. தற்போது ஆண்டு 5 இல் கல்விகற்கும் மாணவிகளும் 01.02.1981 ஆம் திகதிக்கு பின்னர் பிறந்தவர்களும் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவராவர்.
3. பிரவேச பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 45 செலுத்தி 06.12.91 தொடக்கம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இக்கல்லூரியில் நேரில் 16.12.91 முன்னதாகக் கையளிக்கப்படவேண்டும். 16.12.91 ஆம் திகதிக்கு பின்னர் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. இக்கல்லூரியில் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களைத் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் 24.12.91 செவ்வாய்க்கிழமை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிபர்
யா/வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[B/3559]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



நடராஜா மோகன்

தோற்றம்: 19 - 02 - 1966

மறைவு: 13 - 12 - 1989

திதி : 02 - 12 - 1991

மோகனம் இசைத்துக்கொண்டிருக்கும்
எம் மோகனே -
இரண்டாண்டென்ன இரண்டு
கோடி ஆண்டுகள் போனாலும்
எம் இதயக் கரைகள் - உன்
நினைவலைகளை என்றும் தாங்கும் -குடும்பத்தினர்

(B/3561)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கீழ்வரும் பொருட்கள் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் திகதி காலை 10 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

| பொருட்கள். | தொகை. |
|---|---|
| 1. பூட்டு | 03 |
| 2. சஞ்சிகை கட்டும் இயந்திரம் | 01 |
| 3. மின்சார கேத்தில் | 03 |
| 4. சுவர் மணிக்கூடு | 01 |
| 5. போட்டோ பிரதி இயந்திரம் | 01 |
| 6. குளிர் சாதனப் பெட்டி | 01 |
| 7. தண்ணீர் வடிகட்டி | 02 |
| 8. தராசு | 01 |
| 9. புனோ லாம்பு | 01 |
| 10. மர உளி | 07 |
| 11. அலவாங்கு | 01 |
| 12. மின்சார துளைகருவி | 01 |
| 13. மின்சார சோதனைச் சாவி | 03 |
| 14. இரும்பு அரிவாள் | 01 |
| 15. இரும்பு உளி | 02 |
| 16. சாந்தகப்பை | 01 |
| 17. மண்வெட்டி | 05 |
| 18. பிக்கான் | 01 |
| 19. குறடு | 01 |
| 20. சுத்தி | 01 |
| 21. நோக் பிளக் | 02 |
| 22. குப்பை வாளி | 01 |
| 23. புரி ஆணிகள் | 13 |
| 24. கண்ணாடி வெட்டி | 03 |
| 25. தட்டெழுத்து இயந்திரம் | 04 |
| 26. பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் | ஒருதொகுதி |
| 27. பழுதான சொப்பிகள் | ஒருதொகுதி |
| 28. பழுதான பேப்பர்கள் | ஒருதொகுதி |
| 29. சீருடை கழிவுத்துணிகள் | ஒருதொகுதி |
| 30. பழையபுதினப்பத்திரிகைகள் | ஒருதொகுதி |
| 31. பழைய மரப்பெட்டிகள் | ஒருதொகுதி |
| 32. முறிந்த மரக்கொப்புகள் | ஒருதொகுதி |
| 33. Staplers | 02 |
| 34. Netronome | 02 |
| 35. Action/Reaction Kit | 01 |
| 36. Squatting Pan | 01 |
| 37. Cisten Handle | 04 |
| 38. Main Switch 20 Amp | 03 |
| 39. Duplicating Machine | 01 |
| 40. Refrigerator/Deep Freezer | 03 |
| 41. Slide Projector | 01 |
| 42. Stencil Cutting Machine | 01 |

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருட்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப் பொருட்கள் அனைத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும்.

மேற்படி பொருட்களை 4ஆம் 5ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் 4 மணி வரை யாழ். பல்கலைக்கழக நிதியாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

நிதியாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். 29-11-1991.

(B/3560)

## கப்டன் றெஜி



1984ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், தலைமன்னாரிப் பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

வவுனியா யோசப் முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 36 தமிழ் இளைஞர்கள் - செட்டிகுளம், சேமமடுப் பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன 108 தமிழர்கள்.

சுன்னாகத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்;

1985ஆம் ஆண்டு பட்டிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

கப்டன் றெஜி [சுப்பிரமணியம் மகேந்திரன் - காரைநகர்]

1987ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 40 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

ஆனந்த்

முல்லைத்தீவு றெட்பானா பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

கர்ணன் [செல்லநாயகம் மகாதேவன் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு]

சாவகச்சேரியில் தேச விரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் தம்பிப்பிள்ளை [illegible]

மூளாயில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட குப்பிளான் வாசி உட்பட இரு தமிழ் இளைஞர்கள்.

1990ஆம் ஆண்டு அம்பாறை அறுகம்குடாப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

சுனில் [சின்னத்தம்பி அருணைநாயகம் - கோணாவில், அக்கரைப்பற்று]

ராஜன் [சேனைக்குடியிருப்பு கல்முனை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B/3557)

## வெளிவாரிப்பரீட்சை

# யாழ்ப்பாணத்தில் நடாத்த துணைவேந்தர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்திலும் நடாத்துமாறு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவிடமும், உயர் கல்வி அமைச்சிடமும் மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது. போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருப்பதால் மேற்படி ஏற்பாட்டைச் செய்யும்படி கோரப்பட்டிருக்கிறது. (ஈ)

## நியூயோக் செல்லவிருந்த

# இந். போயிங் விமானத்தின் உணவுப் பெட்டியில் குண்டு

(டில்லி)

சென்னையில் இருந்து சென்ற விமானத்தில் ஏற்படவிருந்த பயங்கரமான விபத்தொன்று நேற்றுக் காலையில் தடுக்கப்பட்டது.

புதுடில்லி இந்திரா காந்தி சர்வதேசவிமானநிலையத்திலிருந்து லண்டனுக்கு ஊடாக நியூயோர்க்கிற்கும் புறப்படவிருந்த ஏயார் இந்தியா போயிங்விமானத்தில் உணவுப் பெட்டி ஒன்றில் குண்டு இருந்தது தக்க சம

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ‘தமிழருக்கு மீன்பிடிக்க கற்றுக்கொடுத்த சிங்களவர்’

## -அமைச்சர்கலபதி

(கொழும்பு)

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மீன்பிடிக்கக் கற்றுக் கொடுத்தவர்கள் சிங்களவர்களே'' என்று மீன்பிடி ராஜாங்க அமைச்சர் பி. எஸ். எல். கலபதி தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் இடம் பெற்ற பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே] அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த ஜனவரி முதல் வடக்கு-கிழக்குக்கு சென்று மீன்பிடிக்க சிங்களவர், தமிழர் முஸ்லிம்கள் அனைவருக்கும் உரிய சூழ்நிலையை அமைக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகளிடம் கேட்டுள்ளதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

# மண்ணைக் கடலில் மீனவர்கள் மீது சூடு

(குருநகர்)

கடல் தொழிலில் ஈடுபட்டு நின்ற மீனவர்களை இலக்காக வைத்து சிறிலங்கா இராணுவம் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இச்சம்பவம் நேற்று (01-12-91) அதிகாலை 1 மணி அளவில் யாழ் - மண்ணைக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய இனங்களின் பிரச்சினை

# தீர்வுமுறைபற்றி ஆராய முனசிங்கா கனடா பயணம்

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு தேடும் மற்றொரு முயற்சியாக கனடாவின் இன, மொழிப் பிரச்சினைக்கு காணப்பட்டுள்ள தீர்வுகள் குறித்து தற்பொழுது ஆராயப்பட்டு வருவதாக பாராளுமன்ற தெரிவுக்குழுவின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் ஆராய பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா கனடா சென்றுள்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. க. அதிருப்தியாளர் புதிய கட்சியாக பதிவு

(கொழும்பு)

ஐ.தே.க.விலிருந்த அதிருப்தியாளர்கள் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்து அதனை அரசியல் கட்சியாக அங்கீகரிக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

### சின்னமாக யானை

ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணி என இக்கட்சிக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. கட்சியின் சின்னமாக இரண்டு நீண்ட தந்தங்களையுடைய யானை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை துறைமுகம் தொடர்ந்தும் செயற்படும்

காங்கேசன்துறை துறைமுகம் உணவுப்பொருள்கள் இறக்குவதற்கு திறக்கப்படினும் பருத்தித்துறை துறைமுகத்தையும் தொடர்ந்து

மேலும்

திருமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையிலான சேவையில் அமர்த்தியிருக்கின்றது. இதனுடன் மேற்படி மேனிக கப்பல் ஒன்றும் சேவையில் அமர்த்தப்படவிருக்கின்றது. இம்முயற்சியில் கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பகுதியினர் ஈடுபட்டிருக்கின்றனர். (ஈ)

உணவுப் பொருள்களை இறக்குவதற்காக பயன்படுத்துவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி எடுத்து வருகின்றது.

அண்மையில் கொழும்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் அத்தியாவசிய சேவைகள் உயர் அதிகாரிகளுடனும், கடற்படைகளின் உயர் அதிகாரிகளுடனும், பேசும் போது இவ்விடயம் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இதற்கு அரச தரப்பிலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (ஈ

## சாப்பாட்டு மேசை ஆகிறது

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள சட்டத்தரணிகளின் மேசைகளே அங்குள்ள பொலிசாரின் சாப்பாட்டு மேசையாக மாறியுள்ளது.

# இராணுவ அடாவடித்தனம்; தமிழர் கைது; சித்திரவதை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூருக்குச் சமீபமாகவுள்ள காக்காச்சி வெட்டைப் பகுதியில் மூன்று தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினராலும், தேசவிரோத கும்பலினாலும் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கிய நிலையில் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

மண்டூருக்கு சமீபமாகவுள்ள பாலையடி வெட்டை, வெல்லாவெளி இராணுவ முகாம்களிலிருந்து தேசவிரோதிகளுடன் இணைந்து நேற்று முதினம் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் காக்காச்சி வெட்டை என்னும் கிராமத்தை சுற்றி வளைத்துள்ளனர். அங்கு இருபத்திரண்டு தமிழ மக்களைக் கைது செய்து சித்திரவதை செய்த பின்னர் மூன்று இளைஞர்களை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். வினாசித்தம்பி சிவநாதன் (நாகனாவெளி, வெல்லாவெளி) இன்னும் இரு பிள்ளைகளின் தந்தையான குடும்பத்தரும், பெரியதம்பி கந்தசாமி (22 வயது) என்பவரும் எதிர்மன்ன சிங்கம் சந்தலிங்கம் (32 வயது) வெல்லாவெளி என்ற பிள்ளைகளின் தந்தையான குடும்பத்தர் ஆகிய மூவருமே இராணுவத்தால் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

விமான

யிலும், பின்னிரவிலும் பல பகுதிகளிலும் எறிகணைத் தாக்குதல்களும், விமானத்தாக்குதலும் இடம் பெறுள்ளன.

தமிழீழ

வாக்கிவிட்டோம் என்று அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் அவர் குறிப்பிட்டார்.

செயல்படத் துவங்கியுள்ள தமிழீழ காவல்துறை, பழைய பொலிஸ்துறை மாதிரி இயங்காது. கட்சி சார்பு, பக்கச் சார்பற்று, பாரபட்சமற்று, சாதி சமயங்களுக்கு அப்பாற்பட்டு செயற்படும் என்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

தனியார்

ளும் ஒலிபரப்புச் சேவையில் இடம் பெறாது என்று மகாராஜா நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தனியார் ரி.வி நிலையத்தை அமைப்பதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளதாம்.

போர்

ரைப்பணிய வைப்பதே நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்நிலையில் ஆனையிறவைத் திறப்பது என்பது ஆபத்தான காரியமாகும். ஆனையிறவை திறத்தலினால் குடாநாட்டின் மீதான படை எடுப்பிற்கு இராணுவத்திற்கு சுலபமாக வழி திறந்து விடுவதுபோல் ஆகிவிடும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அவர் தெரிவிக்கையில் இராணுவ நடவடிக்கையின் மூலம் ஆனையிறவு இராணுவ முகாமிற்கான தரைவழி விநியோகப்பாதை ஒன்றைத் தானும் திறக்கமுடியாதநிலையிலும், வான்வழி விநியோகப் பாதை பெரும்பொருட் செலவை ஏற்படுத்துவதுடன் தேவைக்குப் போதுமானதாக இல்லாமையினாலும் தான் ஆனையிறவு முகாமிற்கு ஊடான தரைப்பாதையைத் திறக்க அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாக அவ்வட்டாரங்கள் சுட்டிக் காட்டின;

# சுல்பா தீவிரவாதிகளுடன் புலிகளுக்குத் தொடர்பு

விடுதலைப் புலிகளுடன் சுல்பா தீவிரவாதிகள் தொடர்பு வைத்திருந்தனர் எனப்பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று இந்திய வானொலி தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் அசாமில் இரு பத்திரிகையாளர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களை சுல்பா தீவிரவாதிகளுடன் தொடர்பு படுத்தியே பொலிசார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட செய்தியாளர்களில் ஒருவரே இதனைத் தெரிவித்ததாகவும், இக்குழுவின் உறுப்பினர்களோடு பழகிய காலத்தில் இது தெரிய வந்ததாக அவர் தெரிவித்ததாகவும் இந்திய வானொலி தெரிவித்தது

# கடற்படைக்கு புதியவடிவம் இந்தியா அளிக்க முயற்சி

இந்தியாவின் பரந்த கடற் பிரதேசத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்தியக் கடற்படை தனது படைகளுக்கு புதிய தோற்றம் அளிக்க விருப்பதாக இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

வருங்கால கடற்படையில் நான்கு பரிமாணங்களில் எதிர்த்துப் போரிடும் படைகள் இருக்குமென்றும், அதில் கப்பல்கள், சப் மெரின்கள் விமானங்கள் மற்றும் மின் அணு போர் திறனாற்றல் வசதிகளும் சீரான அளவில் அமைந்திருக்கும் என்றும்,

ஆனால் மிகப் பெருமளவிலான கடற்படையை அமைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# விசாரணை கமிஷன் முன் சாட்சியமளித்தவர் கொலை

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் விசாரணைக் கமிஷனின் முன் தனது குடும்பத்துடன் சென்று சாட்சியமளித்த கிராம சேவகர் விஜயரட்ணம் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவரை சிறிலங்கா இராணுவமே கொன்றதாக அக்கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி பழனிச்சாமி (இளைப்பாறிய ஆசிரியர்)

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இல. 115 இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும், கொட்டடி நமசிவாய வித்தியாலயம், நாவாந்துறை றோ. க. வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவருமான திரு. நல்லதம்பி பழனிச்சாமி 1 12-1991ல் சிவபதமடைந்தார். இவர் தங்கமணியின் அன்புக்கணவரும், தயா (தயாபரன்) பிரான்ஸ், ஆனந்த் (தயாயந்தன்) பிரான்ஸ் திருமதி. பத்மசுந்தரி சின்னராஜா, பிரேமலதா ஆகியோரின் அன்புத் தந்தையும் யாழ்ப்பாணம் மணிகரன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. சுப்பிரமணியம் காலஞ்சென்ற திரு. இரத்தினகோபால், திருமதி லீலாவதி இளையபிள்ளை, திருமதி நகேஸ்வரி பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. S.R. கதிரவேற்பிள்ளை, திரு. S. R. பஞ்சாட்சரம், திரு. S.R பாலசுந்தரம், திருமதிமுத்துலிங்கம் சிவமங்கை ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. க. முத்துலிங்கத்தின் (தேசநிர்மாணிகள்) அன்புச் சகலனும், யாழ்ப்பாணம் ஆதவன் ரேடிங் கொம்பனி உரிமையாளர் திரு க. சின்னராஜா திருமதி மதசாலினி தயாபரன் (ஆசிரியை வேலணை) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி பொன்னம்மா இராஜசபாவின் அன்பு மருமகனும் செல்வி இந்துஜா செல்வன் இந்திரப் பிரதாபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் 2-12-1991 திங்கட்கிழமை பி. ப. 3-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் கொடுப்பவர்:
ந சுப்பிரமணியம்
(சகோதரன்)

(R/1974)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.